بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

December 27 2013

**தமிழாக்கம் : மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப்**

## அன்பு மற்றும் சகோதரத்துவம்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் அருளால் இன்றிலிருந்து காதியானில் ஆண்டு மாநாடு ஆரம்பமாகியுள்ளது. இந்த, ஆண்டு மாநாடு ஒருவேளை பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு சிலரது எண்ணத்திற்கேற்ப இந்தியாவின் ஆண்டு மாநாடு என்று கருதப்படுகிறது. எனினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஊர் என்ற காரணத்தாலும், முழு உலகிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது தூதுச் செய்தி இந்த ஊரிலிருநது பரவியதாலும், காதியானுக்கு கிடைத்திருக்கும் உயர் தகுதியானது எவ்வாறு இவ்வூரை இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான தலைமையகமாக ஆக்கியுள்ளதோ அவ்வாறே இவ்வூரில் நடைபெறும் மாநாடுகளையும் அது எல்லா சமுதாயங்களும் பங்கேற்கின்ற உலகளாவிய மாநாடுகளாக ஆக்கியுள்ளது.

அல்லாஹ்வின் அருளால் இன்று அங்கு 32 அல்லது 33 நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே காதியானுக்கும் ஒரு முக்கியத்துவம் இருக்கின்றது. அங்கு நடைபெறுகின்ற மாநாடுகளுக்கும் ஒரு முக்கியத்துவம் இருக்கின்றது. இந்த ஊரில் வசிக்கின்ற அஹ்மதிகளுக்கும் ஒரு முக்கியத்துவம் இருக்கின்றது. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக உலகின் மூலைகளிலிருந்து வருகை தருகின்ற அஹ்மதிகளுக்கும் ஒரு முக்கியத்துவம் இருக்கின்றது. ஆனால், இந்த ஊரில் வசிப்பவர் இதன் முக்கியத்துவத்திற்கான உரிமையைச் செலுத்தும் போது தான் இந்த முக்கியத்துவம் உண்மையிலேயே தெளிவாகத் தெரியும். மேலும் இதன் மூலமாகத்தான் அதன் குறிக்கோளும் நிறைவேறும். இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருபவர்கள் அங்கு அவர்கள் கழிக்கின்ற இரவையும் பகலையும் இந்த மாநாட்டின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிக்க வேண்டும். அவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையான அடியாராகவும், காலத்தின் இமாமாகவும் இருந்தவர் மாநாட்டின் நோக்கங்களாகக் கூறியிருப்பதாகும். எவர்கள் அன்னாருடன் பைஅத்திற்கான உடன்படிக்கையைச் செய்துள்ளார்களோ அவர்களுக்கு, இதனை அவர்கள் கூறியுள்ளார்கள்.

பொதுவாக உலகின் எந்தவொரு நாட்டிலும் நடக்கின்ற ஆண்டு மாநாட்டின் சூழலானது அதில் கலந்து கொள்பவர்களிடம் ஓர் ஆன்மீக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் இதைப் பற்றி கூறிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் காதியான் ஆண்டு மாநாட்டின் சூழலில் ஆன்மீகத்தின் வேறொரு தாக்கத்தை நம்மால் உணர முடிகின்றது. எவர்கள் அங்கு நடந்த ஆண்டு மாநாடுகளில் கலந்து கொண்டிருக்கின்றார்களோ அவர்களுக்கு இதைப் பற்றி தெரியும். ஒவ்வொரு தூய உள்ளம் கொண்டவரும் இந்த தாக்கத்தை உணர வேண்டும். ஏனென்றால் இந்த ஊரின் சுற்றுச்சூழலிலும், தெருக்களிலும் இருக்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையான அடியாராகிய வாக்களிக்கப்பட்ட மஹ்தி மற்றும் மஸீஹின் நினைவுகளின் நறுமணம் ஆன்மீகத்தின் வேறொரு சூழலின் பக்கம் நம்மை கொண்டு செல்கின்றது. எனவே இந்த சுற்றுச்சூழலில் நமக்கு கிடைக்கும் போதனைகளும் தன்னகத்தே ஒரு சிறப்பான நிறத்தைக் கொண்டதாக இருக்கின்றது. ஒரு சிறப்பான தாக்கம் அதில் இருக்கின்றது. தூய உள்ளம் கொண்ட ஒவ்வொருவரது உள்ளத்திலும் ஒரு சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக அது இருக்கவும் வேண்டும்.

எனவே, இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்ற அனைவருக்கும் நான் இதனை கவனமூட்ட விரும்புகின்றேன். அதாவது எங்கு இந்த மாநாட்டில் கலந்து கொண்டு நீங்கள் அறிவுப்பூர்வமான மற்றும் சீர்திருத்தத்தை ஏற்படுத்துகின்ற சொற்பொழிவுகளிலிருந்து பலனைப் பெறுவீர்களோ அங்கு அந்த நோக்கங்களையும் நீங்கள் உங்கள் கண் முன்னால் வைத்திருக்க வேண்டும். எல்லா சமயத்திலும் அவற்றை நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். அவை, மாநாட்டை நடத்துவதற்கான நோக்கங்களாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியவை ஆகும். அங்கு மாநாட்டை

துவக்கி வைத்திருக்கின்ற எனது பிரதிநிதி இந்த நோக்கங்கள் பற்றி மாநாட்டின் துவக்க நிகழ்ச்சியில் எடுத்துக் கூறியிருப்பார் என்று நான் கருதுகின்றேன். இவ்வாறு நான் கருதுகின்றேன் என்று நான் கூறியதற்குக் காரணம் மாநாட்டின் துவக்க உரையில் என்ன கூறப்பட்டது என்று எனக்கு தெரியாது. பொதுவாக மாநாட்டின் நோக்கங்களை முன் வைத்தவாறே துவக்க சொற்பொழிவு நிகழ்த்தப்படும்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது எதிர்பார்ப்புகளை கண்முன் நிறுத்தியவாறு மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வொரு நபரும் இந்த நாட்களைக் கழிக்க வேண்டும். இந்த மாநாட்டில் பல நாடுகளின் பிரதிநிதிகள் வந்துள்ளனர். மேலும் மாநாட்டின் நோக்கங்களில் ஒன்றாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இதனையும் கூறியுள்ளார்கள். அதாவது ஜமாஅத் சகோதரர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அவர்களுக்கிடையே சகோதரத்துவம், அன்பு, நேசம் ஆகியவற்றின் தொடர்புகளை நிலைநாட்ட வேண்டும். எனவே இன்று அறிமுகம் செய்து கொள்வது மற்றும் சகோதரத்துவத்தை நிலைநாட்டுவது ஆகியவற்றில் எத்தகைய விரிவான நிலை ஏற்பட்டுள்ளது என்றால், காதியானில் வசிக்கின்ற ஒரு சாதாரண ஊழியர் அமெரிக்காவில் வசிக்கின்ற ஒருவரையும், ரஷ்யாவில் வசிக்கின்ற ஒருவரையும் சந்திப்பதை இன்று நாம் பார்க்கின்றோம். அல்லது அரபு நாட்டிலுள்ள ஒருவரை அல்லது ஐரோப்பாவில் வசிக்கின்ற ஒருவரை சந்திப்பதைப் பார்க்கின்றோம். அல்லது அனைவரும் பரஸ்பரம் ஒருவர் மற்றவரைச் சந்திக்கும் போது நம்பிக்கையாளர்களின் சகோதரத்துவப் பண்பை சிறப்பாக எடுத்துக் காட்டுகின்ற அந்த ஆன்மா நமக்கு தென்படுகின்றது. இந்த ஆன்மாவாவது இந்தப் பண்பை சிறப்பாக எடுத்துக் காட்டக்கூடியதாக இருக்கவும் வேண்டும். எவருடைய உள்ளத்திலாவது ஆணவம் இருந்தால் அவர் தனது சகோதரரை இந்த சகோதரத்துவ உணர்வுடன் சந்திக்க மாட்டார். அல்லது ஒரு நகரத்தில் இருக்கின்ற செல்வந்தர் தனது ஏழை சகோதரரை அவர், அவரை அறிந்திருந்தாலும் அறியாமல் இருந்தாலும், அவருடன் நல்ல தொடர்பு இருந்தாலும் இல்லா விட்டாலும் அல்லது அவர் மீது பகைமை இருந்தாலும் அல்லது அவரைப் பற்றி புகார்கள் கூறுபவராக இருந்தாலும், எதுவரை எல்லா மாசுகளையும் அகற்றி விட்டு, எல்லா விதமான பாகுபாடுகளையும் பணக்காரர், ஏழை என்ற வித்தியாசத்தையும் அழித்து விட்டு சகோதரத்துவத்தின் முன்மாதிரியை அவர் காட்டாமல் இருக்கின்றாரோ அதுவரை, மாநாட்டில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகள் இத்தகையவர் –களுக்கு அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டாலும் எந்தப் பலனையும் தராது. அவ்வாறே அங்கு இருக்கும் சுற்றுச்சூழலும் எந்தப் பலனையும் தராது. மாநாட்டிற்கு வருவதும் கூட அவருக்கு பயனற்றதாக இருக்கும். காதியானின் ஆன்மீக சூழலும் கூட அத்தகைய நபரிடம் இருக்கும் கடினமான உள்ளம் காரணமாக அவருக்கு ஆன்மீகமற்றதாக இருக்கும். அதன் தாக்கத்திலிருந்து அவரது உள்ளம் காலியாக இருக்கும்.

எனவே, மாநாட்டின் நோக்கங்களிலிருந்து முழுமையாகப் பலனைப் பெற வேண்டுமென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் குறிப்பிட்டுள்ள மாநாட்டு நோக்கங்களில் மிக முக்கியமான இந்த நோக்கத்தைக் கண்முன் நிறுத்தியவாறு மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் செயல்பட வேண்டும். செல்வந்தர், ஏழை, பெரியவர், சிறியவர் என்ற வித்தியாசத்தை அழித்து விடுங்கள். பரஸ்பரம் ஒருவருக்கு மற்றவருடன் பகை இருந்தாலும் இந்த சூழலில் வந்த பிறகு அதை எப்படி தம்மிடமிருந்து அகற்றி விட வேண்டும் என்றால் பகைமையே இல்லாதது போன்று தெரிய வேண்டும்.

காதியானில் நிரந்தரமாக குடியேறியுள்ள அஹ்மதிகளும் தங்கள் நெஞ்சங்களை அலசிப் பார்க்க வேண்டும். தங்களது உள்ளங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு எத்தகைய சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளான் என்றால் அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஊரில் வசித்து வருகின்றார்கள். அதன் சுற்றுச்சூழல் காலத்தின் இமாமின் விருப்பத்திற்கேற்ப இருக்க வேண்டும். இதற்காக அவர்கள் ஜமாஅத்திற்கு தர்பிய்யத் வழங்க முயற்சி செய்தார்கள். பிறகு அல்லாஹ் இங்கு வசிப்பவர்களுக்கு அவர்களது வாழ்நாளில் மாநாட்டில் அவர்கள் கலந்து கொள்வதற்கான இன்னொரு சந்தர்ப்பத்தையும் வழங்கியுள்ளான் என்பதன் பக்கமும் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். தர்பிய்யத்திற்கான இந்த அரிய சந்தர்ப்பத்திலிருந்தும் அவர்கள் பலன்பெற வேண்டும். அங்கு வருகின்ற ஒவ்வொரு நபரும் எவ்வாறு இந்த அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றின் தொடர்பையும் உணர்வையும் நிலைநாட்ட வேண்டுமோ அவ்வாறே இந்த ஊரில் வசிக்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் கூட இந்த வழிமுறைக்கேற்ப தன்னை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அவர் இந்த நோக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்கின்றாரா? என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும். பிறகு இந்த ஆய்வுதான் உலக விருப்பங்களிலிருந்தும் உள்ளங்களை தூய்மைப்படுத்தும். மேலும் இதன் மூலமாகவே மறுமையின் பக்கம் முற்றிலும் குனிந்து விடுவதற்கான எண்ணமும் உணர்வும் உருவாகும். இறைவன் மீதுள்ள அச்சம் ஏற்படும். இந்த உலக விருப்பங்கள் பற்றிய கவலை இருக்காது.

மாறாக, وَلْتَنْظُرْ نَفْسٌ مَّا قَدَّمَتْ لِغَدٍ ***ஒவ்வொரு ஆன்மாவும் நாளைக்கென்று எதனை அனுப்பியுள்ளது என்பதை பார்க்கட்டும். (59:19)*** என்பதன் கருத்து தான் முன்னால் நிற்கும். நாம் இறைவனின்

விருப்பத்தைப் பெறுவதற்காகவும் இந்த உலகிலிருந்து நாளைக்கென்று எதை அனுப்ப வேணடும் என்பதற்கான முயற்சி இருக்கும். தூய்மை மற்றும் இறையச்சத்தின் பக்கம் நமது பார்வை இருக்க வேண்டுமா? அல்லது உலக விசயங்களில் மூழ்கியிருக்கும் முன்மாதிரியைக் காட்ட வேண்டுமா? இறைவனைப் பற்றிய அச்சத்தை உள்ளத்திலிருந்து வெளியேற்றி விட்டு இந்த வாழ்க்கையைக் கழிக்க வேண்டுமா? பைஅத் உடன்படிக்கையைப் பேணி நடக்க வேண்டுமா? அல்லது பைஅத் உடன்படிக்கை பற்றி கூறுகின்ற அழகான பேட்ஜை நெஞ்சில் அணிந்தவாறு தம்மைத்தாமே பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றுபவராக கருதலாமா? இறையச்சம், தீமைகளை விட்டு விலகியிருப்பது, மென்மையான உள்ளம் ஆகிய நற்பண்புகளைத் தங்களிடம் உருவாக்க வேண்டுமா? அல்லது தற்பெருமையுடனும் அகங்காரத்துடனும் தமது தலைகளையும் கழுத்துகளையும் நிமிர்த்தியவாறு செல்ல வேண்டுமா? உண்மையின் அழகான முத்துக்கள் சிதறிக் கிடக்கும்படி செய்ய வேண்டுமா? அல்லது பொய்யின் இருள்களில் சென்றவாறு இறைவனின் வெறுப்பை விலைக்கு வாங்க வேண்டுமா? மார்க்கப் பணிகளுக்காக தம்மைத்தாமே தயராக்கிக் கொண்டவாறு முஹம்மதிய மஸீஹின் பிரச்சாரத்தை நிறைவடையச் செய்ய வேண்டுமா? அல்லது உலக விசயங்களின் அலங்காரங்களிலும் பொலிவுகளிலும் மூழ்கியவாறு தமது நோக்கத்தை மறந்து விட வேண்டுமா? இவ்வாறு ஆய்வு செய்து பார்ப்பதும் நமது எதிர்மறையான செயல்களை ஆய்வு செய்வதும் நமக்கு مَا قَدَّمَتْ لِغَدٍ *நாளைக்கென்று எதனை நாம் அனுப்பியுள்ளோம்? (59:19)* என்பதை எந்த அளவு நாம் கண்முன் நிறுத்தி செயல்படுகின்றோம் என்பதை நமக்கு கூறும்.

எனவே, மாநாட்டின் இந்த மூன்று நாட்களும் இந்த விசயங்களை ஆய்வு செய்து பார்ப்பதற்கும் தங்களது செயல்களை இறைவனின் திருப்திக்கேற்ப வடிவமைத்துக் கொள்வதற்கும் சிறந்த நாட்களாக உள்ளன. அப்போது பரஸ்பரம் ஒருவர் மற்றவரது ஆன்மீக தாக்கத்தை ஏற்றுக் கொள்வதன் பக்கம் கவனம் இருக்கும். கூட்டாகவும் தனித்தனியாகவும் தஹஜ்ஜுது தொழுகையை நிறைவேற்றுவது ஒரு சிறப்பான சூழலை உருவாக்கும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஸஜ்தா செய்த மற்றும் துஆக்கள் செய்த இடங்களும் கூட பல உள்ளங்களுக்கும் நிம்மதியிழந்த நிலையில் துஆக்கள் செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. ஒருவர் அறியாத நிலையில் ஆன்மீகம் பரவுகின்ற ஒரு சூழல் நிலவுகின்றது.

எனவே, இந்த மூன்று நாட்கள் முகாமிலிருந்தும் முழுமையாக பலனைப் பெறுங்கள். இந்த நோக்கத்தைப் பெறாமலேயே அங்கிருந்து திரும்புபவராக எந்தவொரு அஹ்மதியும் இருந்து விடக்கூடாது. இந்த மூன்று நாட்களையும் தனது சீர்திருத்தத்திற்கான சிறந்த வழியாக ஆக்கிக் கொள்ளாதவராக காதியானில் வசிக்கின்ற எந்தவொரு அஹ்மதியும் இருந்து விடக்கூடாது. ஆனால் இதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த விசயத்தையும் பேணுவதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். எந்த மாற்றத்தை நாம் உருவாக்க இருக்கின்றோமா அல்லது உருவாக்கி -யுள்ளோமோ அதில் நிரந்தரமாக நிலைத்திருக்க வேண்டும். அதை தமது வாழ்வின் நிரந்தரமான பகுதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அங்குள்ள ஒவ்வொரு நபரும் நாம் எந்த தூய மாற்றத்தை ஏற்படுத்துவோமா அதில் நமது வாழ்நாள் உள்ளவரை தொடர்ந்து நிலைத்திருப்போம் என்பதில் உறுதியான எண்ணம் உடையவராக ஆக வேண்டும். ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகள், அறிவுப்பூர்வமான விசயங்கள் ஆகியவற்றைக் கேட்பது தற்காலிகமாக மார்க்க அறிவுப் பெருகுவதற்கான வழியாக மட்டும் இருந்து விடக் கூடாது. மாறாக, நிரந்தரமாக மார்க்க அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கு வாழ்நாள் உள்ளவரை தொடர்ந்து முயற்சி செய்து வர வேண்டும். சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாக இருக்கின்ற மக்களில் ஒருவராக நாம் ஆகிவிடக் கூடாது என்பதிலும் உறுதியான எண்ணம் கொண்டவர்களாக நாம் இருக்க வேண்டும். எந்த அறிவை நாம் பெற்றுள்ளோமோ அதை நமது வாழ்வில் நாம் செயல்படுத்தவும் வேண்டும்.

அல்லாஹ்வின் இந்தக் கூற்றை எப்போதும் நம் கண் முன் நிறுத்த வேண்டும். **அல்லாஹ் கூறுகின்றான்:**

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لِمَ تَقُولُونَ مَا لَا تَفْعَلُونَ *நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் செய்யாததை ஏன் கூறுகின்றீர்கள். (61:3)*

எப்போது இந்த விசயங்களின் பக்கம் கவனம் இருக்குமோ அப்போதுதான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதன் நோக்கங்களும் நிறைவேறும். அப்போதுதான் மிகவும் நிரந்தரமாக பெற வேண்டிய அந்த நோக்கங்களை நாம் பெற முடியும். அந்த நோக்கங்களை நிறைவேற்றவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் பைஅத் உடன்படிக்கை செய்துள்ளார்கள். அப்போதுதான் நாம் மாநாட்டின் அருள்களிலிருந்து நிரந்தரமாக பலன்களைப் பெறுபவர்களாக ஆக முடியும். அப்போது தான் நமது சீர்திருத்தத்தின் பக்கம் நமக்கு கவனம் இருக்கும். அப்போதுதான் நாம் நம்மை ஆய்வு செய்து கொண்டிருப்போம். அப்போதுதான் நாம் நமது பிள்ளைகளுக்கு முன்னால் நல்ல முன்மாதிரியை நிலைநாட்டுபவர்களாக ஆக முடியும். அப்போதுதான் நாம் நமது பிள்ளைகளின் சீர்திருத்தத்திற்கான வழியாக ஆக முடியும். அப்போது தான் நமக்கு கீழுள்ளவர்கள் மற்றும் நமது தாக்கத்தின் கீழுள்ள நபர்களுக்கு வழிகாட்டுவதற்கான உரிமையை செலுத்துவதன் பக்கம் நமக்கு கவனம் ஏற்படும். அப்போது தான் தப்லீகிற்கான

உரிமையையும் செலுத்துபவராக நாம் ஆக முடியும். எனவே இது மிகப்பெரும் பணியாகும். இதனை நம்மில் ஒவ்வொருவரும் செய்தாக வேண்டும்.

ஆனால், உண்மையை விரும்புபவர்களாக நாம் ஆவதுடன் நமது சிறப்பம்சங்களைப் பார்ப்பதற்குப் பதிலாக, நமது குறைகள் மீது பார்வையை வைப்பவர்களாகவும் அவற்றை தேடுபவர்களாகவும் ஆகும்போது தான் இந்த தரத்தை நாம் நிலைநாட்ட முடியும். மேலும் இறைவனின் மன்னிப்பை பெறுவதற்காக நிம்மதியிழந்தவர்களாக நாம் ஆகும்போது தான் இந்த நிலை உருவாக முடியும். இறைவன் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களது கட்டளைகளுக்கு முன்னால் நாம் நமது கழுத்துக்களை வைத்து விடும் போது தான் இது நடைபெறும். காரணங்களும் சாக்குப்போக்குகளும் கூறாமல் கட்டுப்படுதலில் உயர்வான முன்மாதிரியைக் காட்டும்போதுதான் இந்த நிலை உருவாகும். அப்போது கட்டுப்படுவதிலிருந்தும் விலகி ஓடுவதற்கான வழிகளுக்கு எதிரில் சுவர்கள் நிற்கும். சாக்குப்போக்குகளைக் கூறுகின்ற வழிகளுக்கு எதிரில் சுவர்கள் நிற்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது போதனைகள், தமது ஜமாஅத்திடம் அவர்கள் வைத்திருந்த எதிர்பார்ப்புகள், விருப்பங்கள் ஆகியவற்றிற்கு நமது எதிர்பார்ப்புகள் மற்றும் விருப்பங்களை விட முன்னுரிமை வழங்கும்போது தான் இந்த தரத்தை நாம் அடைய முடியும். அவர்களது விருப்பத்திற்கேற்ப உண்மை மற்றும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்கின்ற உயர்முன்மாதிரியைக் காட்டும்போது தான் இந்த தரத்தை நாம் அடைய முடியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள நம்மிடம் என்ன எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் வைத்துள்ளார்கள்?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

சஹாபாக்கள் (ரலியல்லாஹு அன்ஹும்) தங்களது வாழ்நாளில் செய்து காட்டியதைப் போன்று நீங்கள் உங்களது சொல்லையும் செயலையும் ஒன்றாகவும் சரியாகவும் வைத்திருங்கள். அவ்வாறே நீங்களும் அவர்களது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடந்தவாறு உங்களது உண்மை, நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வது ஆகியவற்றின் முன்மாதிரியைக் காட்டுங்கள். ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் அவர்களது முன்மாதிரியை எப்போதும் உங்கள் கண் முன்னால் வைத்திருங்கள். இந்த விசயங்கள் நாம் சிந்திக்கும் போது நமக்கு அதில் வியக்கத்தக்க முன்மாதிரி தென்படுகின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். அவர்களது வாழ்வின் உண்மை மற்றும் ஆழ்ந்த பற்று ஆகியவற்றின் முன்மாதிரிகளைப் பார்க்கும் போது அவற்றில் வியக்கத்தக்க மகிமை தென்படுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு இறைவனிடமிருந்து இல்ஹாம் வந்துள்ளது. நான் நபியாக இருக்கின்றேன் என்று கூறியதும் ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் எந்த கேள்வியும் கேட்காமல் பெருமானார் (ஸல்) அவர்களிடம் நான் உங்களை இறைவனின் நபியாக ஏற்றுக் கொள்கின்றேன் என்று கூறினார்கள்.

மார்க்கத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எனக்கு சந்தா தேவைப்படுகின்றது. நம்பிக்கையாளர்கள் தங்கள் செல்வத்திலிருந்து மார்க்கத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பொருளை வழங்க வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதும், ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் தமது வீட்டிலுள்ள எல்லா செல்வங்களையும் கொண்டு வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தந்து விட்டார்கள். நிராகரிப்பவர்கள் கொடுமையிழைத்ததன் காரணமாக இப்போது அவர்களை எதிர்த்து போர் செய்ய எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது என்றும், அவர்களுக்கு கடுமையாக பதில் கூறவும், அவர்களுக்கு எதிராக வாள் எடுக்கவும் எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய போது ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் வாளை எடுத்துக் கொண்டு நான் ஆஜராகி விட்டேன் என்று கூறியவாறு வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட சமயத்தில் உடனடியாக தமது தீர்ப்பை மாற்றிக் கொண்டு போர் செய்ய வேண்டாம்; சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளிப்படுத்திய போது பெரும் பெரும் சஹாபாக்கள் உட்பட எல்லாரும் நிம்மதியிழந்து காணப்பட்டனர். சிலரது நெற்றியில் விருப்பமின்மையின் அடையாளங்கள் தென்பட்டன. இது என்ன நடக்கின்றது? என்று அவர்கள் கேட்டனர். ஆனால் ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் நீங்கள் கூறுவது முற்றிலும் சரியானதே. சமாதானம் தான் ஏற்பட வேண்டும் என்று கூறினார்கள். இந்த முன்மாதிரியை தம் கண் முன்னால் வைக்க வேண்டும் என்பதே தமது ஜமாஅத்திடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வைத்துள்ள எதிர்பார்ப்பாகும். இந்த தரம் நம் கண் முன்னால் இருந்தால்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகின்ற ஆன்மா நம்மிடம் நிலைத்திருக்கும்.

ஒரு மாநாட்டின் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றிற்கு ஏற்ப செயல்படாமல் இருந்ததன் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எந்த அளவு துக்கம் ஏற்பட்டதென்றால், எந்த அளவு அவர்கள் தமது வெறுப்பை வெளிப்படுத்திக் காட்டினார்கள் என்றால் அதை பார்க்கும் போது நாம் நிம்மதியிழந்து விடுகின்றோம்.

எனவே, இந்தக் காலத்தில் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கத்தை நிறைவடையச் செய்வதில் பங்கு பெறுபவர்களாக ஆக வேண்டும் என்றால் நாம் அவர்களது ஒவ்வொரு கூற்றுக்கும் லெப்பைக் என்று கூறியவாறு முன்னேற வேண்டியது அவசியமானதாகும். தங்களிடம் ஆன்மீகப் புரட்சியை உருவாக்க முயற்சி செய்ய வேண்டியது அவசியமானதாகும். ஹுனைன் போரின் போது சஹாபாக்கள் காட்டிய அந்த ஆற்றலுடனும் உணர்வுடனும் செயல்பட வேண்டியது அவசியமானதாகும். ஏனென்றால் இந்த உணர்வு இல்லாமல் நாம் வீணான விசயங்களிலிருந்தும் தப்பிக்க முடியாது. உலகின் பேராசைகளிலிருந்தும் நாம் சீர்திருந்தவும் முடியாது. மாநாட்டில் கலந்து கொள்வதன் ஆன்மாவை நம்மால் புரிந்து கொள்ள முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கத்தையும் நாம் புரிந்து கொள்ள முடியாது. ஹுனைன் போரில் என்ன நடந்தது? அப்போதிருந்த இஸ்லாமிய வரலாற்றின் அடிப்படையில் எதிரிகளின் படையில் இருந்தவர்களின் எண்ணிக்கையை விட முஸ்லிம்களின் படையில் இருந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் அளவில் முஸ்லிம்கள் தயார் செய்த முதல் படையாக அது இருந்தது. ஆனால், எவர்கள் முஸ்லிம்களின் படையில் இருந்தனரோ அவர்களில் பெரும்பாலார் நம்பிக்கையாளர்கள் செய்ய வேண்டிய தியாகங்களின் ஆன்மாவைப் புரிந்து கொள்ளாதவர்களாக இருந்தனர். அவர்கள் அதைப் பற்றி தெரிந்து கொள்ளவில்லை. அம்பு எய்துகின்ற 4000 பேர் எதிரிகள் தரப்பிலிருந்தும் நுட்பமாக செயல்பட்டு திடீரென்று அம்புகளை எய்தி தொடர்ந்து தாக்குதல் நடத்திய போது சிலர் பலவீனமான ஈமான் கொண்டவர்களாக இருந்ததாலும் சிலரது சவாரிகள் வெருண்டோடியதன் காரணமாகவும் முஸ்லிம்கள் இங்குமங்குமாக சிதறுண்டு போய் விட்டனர். இதன் விளைவாக இஸ்லாமியப் படையும் இங்குமங்குமாக சிதறுண்டு போய் விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மட்டும் தமது 12 சஹாபாக்களுடன் போர்க்களத்தில் இருந்தார்கள். ஆனால், அவர்கள் தமது பாதங்களைப் பின்னோக்கி வைக்கவில்லை. ஞானமாக செயல்படுவது இப்போது நம்மிடம் எதிர்பார்ப்பது நாம் திரும்பிச் சென்று நமது படைகளை ஒன்றுதிரட்டுவதே ஆகும் என்று பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை கேட்டு விட்டு இறைவனுடைய நபி போர்க்களத்திலிருந்தும் புறமுதுகு காட்டி செல்லமாட்டார் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், இந்த சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் உரத்த குரலையுடைய ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம் அன்ஸார்களை குரல் கொடுத்து அழைத்து அன்ஸார்களே! இறைவனின் தூதர் உங்களை அழைக்கின்றார் என்று கூறுமாறு கூறினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் இந்த சம்பவம் தொடர்பாக ஒரு சிறந்த விளக்கத்தை ஓரிடத்தில் கூறியுள்ளார்கள். இங்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அன்ஸார்களை மட்டும் அழைத்துக் கூறியது ஏன்? என்பதை அவர்கள் விளக்கியுள்ளார்கள். இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. ஆனால் இதற்கு இந்த ஒரு காரணமும் இருந்தது. மக்காவிலுள்ள சிலர் தான் இந்த தோல்விக்கு பொறுப்பாளிகளாக இருந்தனர். அவர்கள் இடம்பெயர்ந்து வந்த முஹாஜிரீன்களுக்கு நெருக்கமானவர்களாக இருந்தனர். இதனால் முஹாஜிரீன்களுக்கு இதன் மூலம் ஒரு சிறு தண்டனை வழங்கப்பட்டது. நீங்கள் உங்கள் தோழர்களுடன் இணைந்திருந்தவாறு இன்று நாங்கள் அதிகமான எண்ணிக்கையில் இருக்கின்றோம். இன்று எங்களை எவராலும் தோற்கடிக்க முடியாது. உங்களுக்கு பிரியமான எந்த உறவினர்கள் மீது நீங்கள் நம்பிக்கை வைத்து அவர்களைச் சார்ந்திருந்து செயல்பட்டீர்களோ அவர்களின் காரணமாகவே இவையெல்லாம் நடைபெற்றன என்பதை உணர்த்துவதற்காகவே பெருமானார் (ஸல்) அவர்கள் அன்ஸார்களை மட்டும் அழைத்தார்கள்.

அன்ஸார்கள் கூறினர்: எங்களது காதுகளில் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் உங்களை அழைக்கின்றார் என்ற இந்த குரல் கேட்டதும் அதற்கு முன்பே நாங்கள் எங்களது சவாரிகளைப் போர்க்களத்தை நோக்கித் திருப்புவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தோம். ஆனால், இந்த குரல் எத்தகைய மந்திரத் தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், ஒரு புது உணர்வும் மின்னலைப் போன்ற ஆற்றலும் எங்களது உடலில் உருவாகியது. எந்த சவாரிகளைத் திருப்ப முடிந்ததோ அதில் இருந்தவர்கள் அந்த சவாரிகளுடன் போர்க்களத்தை அடைந்து விட்டனர். எந்த சவாரிகள் திரும்புவதற்கு தயாராகவில்லையோ, முயற்சி செய்தும் கூட அவை திரும்பாமல் இருந்தனவோ அதில் சவாரி செய்தவர்கள் அந்த சவாரிகளின் கழுத்துக்களை தமது வாளால் வெட்டி விட்டனர். பிறகு ஓடியவாறு போர்க்களத்தைச் சென்றடைந்தனர். மேலும் லெப்பைக் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! லெப்பைக் என்று கூறியவாறு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஒன்றுதிரண்டு விட்டனர். லெப்பைக் என்று கூறுகின்ற இந்த ஆன்மாவைப் பெற்றவாறு இன்று நாமும் அவ்வாறே

செயல்பட வேண்டும். இந்த ஆன்மாவை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இன்றும் கூட இறைவனால் அனுப்பப்பட்டுள்ள ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பர் நம்மை அழைக்கின்றார். உங்களது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று அவர்கள் கூறுகின்றார்கள். மாநாட்டிற்கு வந்து மாநாட்டின் நோக்கங்களைப் பெற முயற்சி செய்யுங்கள் என்று கூறுகின்றார்கள். உங்களது நாட்களை இறையச்சத்துடனும் இறைவன் மீதுள்ள பேரன்பிலும் கழியுங்கள் என்று கூறுகின்றார்கள். இறைவனை நினைவு கூறுங்கள். உங்களுக்கு கிடைத்துள்ள இந்த மூன்று நாட்களையும் இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான நிரந்தரமான வழியாக ஆக்கிக் கொள்ளுங்கள். கட்டுப்படாமல் ஓடுகின்ற உங்களது மனயிச்சைகள் என்ற குதிரைகளின் கழுத்துக்களை வெட்டுங்கள். இவ்வாறு காலத்தின் இமாம், சீர்திருத்தவாதி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றி வந்த நபி நமது செயல் அளவிலான சீர்திருத்தத்தின் பக்கம் நம்மை அழைக்கின்றார்கள். எனவே, நாமும் லெப்பைக் என்று கூறியவாறு அவர்களுக்கு அருகில் ஒன்றுதிரள வேண்டியது அவசியமாகும். இவ்வாறு அவர்களுக்கு அருகில் ஒன்றுசேர்வது நமது கடமையாகும்.

இன்று வாளேந்தி ஜிஹாது செய்வதற்காக அழைக்கப்படவில்லை. மாறாக, நமது நஃப்ஸுடன் ஜிஹாது செய்வதற்காக நாம் அழைக்கப்படுகின்றோம். இதில் வெற்றி பெறுவது முழு உலகிலும் இஸ்லாத்தின் கொடியைப் பறக்க விடுவதற்குக் காரணமாக அமையும். நாம் ஏற்கனவே கூறியது போன்றே அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் புதிய தரத்தை நிலைநாட்ட வேண்டிய தேவை உள்ளது. தூய்மை மற்றும் இறையச்சம் ஆகியவற்றின் ஏணிப்படிகளில் ஏறிச் செல்ல வேண்டிய தேவை இருக்கின்றது. பணிவு, தாழ்மை ஆகியவற்றின் வழிகளைத் தேடுவது அவசியமானதாகும். இஸ்லாத்தை தப்லீக் செய்வதற்காக உயிர், பொருள், நேரம், கண்ணியம் ஆகியவற்றைத் தியாகம் செய்வதற்காக நமது செயல்கள் மூலம் அதனை வெளிப்படுத்திக் காட்டுவது அவசியமானதாகும். இறைவனை நினைவு கூறுவதன் மூலமாக நமது நாவுகளை ஈரமாக வைத்திருப்பது அவசியமானதாகும். இறைவணக்கத்தின் உயர்வான தரத்தின் மூலமாக இறை நெருக்கத்தைப் பெற முயற்சி செய்வது அவசியமானதாகும்.

இந்த மூன்று நாட்களிலும் காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்களும் முழுமையாகப் பயனடைய வேண்டும். இந்த நாட்களில் வேறு பல இடங்களிலும் மாநாடுகள் நடைபெறுகின்றன. அமெரிக்காவின் வெஸ்ட் கோஸ்டில் மாநாடு நடக்கின்றது. பிறகு மாலியில் மாநாடு நடக்கின்றது. நைஜரில் மாநாடு நடக்கின்றது. நைஜீரியாவில் மாநாடு நடக்கின்றது. செனிகலில் மாநாடு நடக்கின்றது. ஐவரிகோஸ்டில் மாநாடு நடக்கின்றது. இந்த எல்லா இடங்களிலும் நடைபெறுகின்ற மாநாடுகளில் கலந்து கொள்பவர்கள் இந்த நாட்களில் அருளைப் பெற குறிப்பாக முயற்சி செய்யுங்கள்.

இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன். இறைவனது தூதர் நம்மிடம் இருக்க வேண்டும் என்று விரும்புகின்ற சில விசயங்களின் பக்கம் அவை நமக்க வழிகாட்டுகின்றன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஜமாஅத்தின் ஒற்றுமை மற்றும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவது ஆகியவற்றைப் பற்றி இதற்கு முன்பு பலமுறை நான் கூறி விட்டேன். நீங்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் ஒற்றுமையாக இருங்கள். ஒன்றாக இணைந்திருங்கள். இறைவன் முஸ்லிம்களுக்கு இந்தப் போதனையைத் தான் வழங்கியுள்ளான். நீங்கள் ஓருடல் போன்று ஆகி விடுங்கள். இல்லையெனில், உங்களின் வலிமை அகன்று விடும் என்று அவன் கூறியுள்ளான். தொழுகையில் ஒருவர் மற்றவருடன் இணைந்து நிற்க வேண்டும் என்ற கட்டளை பரஸ்பரம் உங்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதற்காகவே கூறப்பட்டுள்ளது. மின்னலிலுள்ள ஆற்றல் போன்று ஒருவரிடமுள்ள நன்மை மற்றவரிடம் ஊடுறுவும். ஒற்றுமையின்றி கருத்து வேறுபாடு இருந்தால் பிறகு பாக்கியமற்றவராக ஆகிவிடுவீர்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், உங்களில் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் அன்பு செலுத்துங்கள். ஒருவர் மற்றவருக்காக மறைவாக துஆ செய்யுங்கள். ஒருவர் மற்றவருக்காக மறைவாக துஆ செய்கின்ற போது உமக்கு அவ்வாறே நடக்கட்டும் என்று மலக்கு கூறுகின்றார் என்று கூறியுள்ளார்கள். இது எவ்வளவு உயர்வான விசயமாகும். மனிதனுடைய துஆ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றாலும் மலக்குகளின் துஆ ஏற்றுக் கொள்ளப்படும். பரஸ்பரம் உங்களிடம் கருத்து வேறுபாடு இருக்கக் கூடாது என்பதையே நான் போதிக்கின்றேன். இதையே நான் கூற விரும்புகின்றேன். நான் இரண்டு விசயங்களையே கொண்டு வந்துள்ளேன். ஒன்று இறைவனின் ஏகத்துவத்தைப் பின்பற்றிச் செல்லுங்கள். இரண்டாவது உங்களில் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் அன்புடன் நடந்து கொண்டு உங்களது அனுதாப உணர்வை வெளிப்படுத்திக் காட்டுங்கள். மற்றவர்களுக்கு அற்புதங்களாக இருக்கின்ற அத்தகைய முன்மாதிரியைக் காட்டுங்கள். இந்த ஆதாரம் தான் சஹாபாக்கள் ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அவர்களிடம் உருவாகி இருந்தது.

كُنْتُمْ أَعْدَاءً فَأَلَّفَ بَيْنَ قُلُوبِكُمْ *நீங்கள் ஒருவருக்கொருவர் பகைவர்களாக இருந்தீர்கள். அவன் உங்களது உள்ளங்களை இணைத்து விட்டான். (3:104)*

நினைவில் கொள்ளுங்கள். உள்ளங்கள் இணைந்திருப்பது ஓர் அற்புதமாகும். நினைவில் கொள்ளுங்கள். உங்களில் ஒவ்வொருவரும் தமக்காக விரும்புவதையே தமது சகோதரருக்காகவும் விரும்புபவராக ஆகாத வரையில் அவர் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்ல. அவர் பெரும் துன்பத்திலும் சோதனையிலும் இருக்கின்றார். அவரது முடிவு நல்லதாக இருக்காது.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

காழ்ப்புணர்ச்சியை விட்டு விலகியிருப்பது மஹ்தியின் அடையாளமாகும். அந்த அடையாளம் நிறைவேறாமல் இருக்குமா? அது கண்டிப்பாக நிறைவேறும். நீங்கள் ஏன் பொறுமையைக் கடைபிடிப்பதில்லை? இது ஒரு மருத்துவ அனுபவமாகும். எதுவரை சில நோய்களை முற்றாக நாம் அழிப்பதில்லையோ அதுவரை நோய் அகலாது. என் மூலமாக ஒரு நல்ல ஜமாஅத் உருவாகும் இன்சா அல்லாஹ். ஒருவர் மற்றவரிடம் பகைமை கொள்வதற்கு என்ன காரணம்? கஞ்சத்தனம், சுயநலம் மற்றும் கட்டுப்பாடில்லாத உணர்வு ஆகியவையே இதற்கு காரணமாகும். தமது உணர்வுகளைக் கட்டுப்பாட்டில் வைக்காத பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் அன்புடனும் சகோதர உணர்வுடனும் நடந்து கொள்ளாத அத்தகைய மக்களை எனது ஜமாஅத்தை விட்டும் நான் விலக்கி விடுவேன். எவர்கள் இத்தகைய மக்களாக உள்ளனரோ அவர்கள் சிறந்த முன்மாதிரியைக் காட்டாத வரையில் அவர்கள் சில நாட்களுக்குத்தான் விருந்தாளிகளாக வந்துள்ளனர் என்பதை நினைவில் வைக்க வேண்டும். எவரை காரணமாக வைத்தும் என் மீது ஆட்சேபனை செய்யப்படுவதை நான் விரும்பவில்லை. எவர் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவராக இருந்தும் எனது விருப்பத்திற்கேற்ப செயல்படாமல் இருக்கின்றாரோ அவர் காய்ந்து போன கிளையாக இருக்கின்றார். தோட்டக்காரர் அதனை வெட்டி எறியாமல் வேறு என்ன செய்வார்? அந்த கிளை மற்ற கிளைகளுடன் சேர்ந்திருந்து தண்ணீரை வேண்டுமானால் உறிஞ்சலாம். ஆனால், அது அவற்றை செழிப்பானதாக ஆக்க முடியாது. அந்த கிளை மற்ற கிளைகளையும் அழித்து விடும். எனவே, பயப்படுங்கள். தமக்கு சிகிச்சை அளித்துக் கொள்ளாதவர் என்னுடன் இருக்க முடியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் திருக்குர்ஆனின் கூறியுள்ளான்.

وَجَاعِلُ الَّذِيْنَ اتَّبَعُوْكَ فَوْقَ الَّذِيْنَ كَفَرُوْٓا اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ *உம்மைப் பின்பற்றுபவர்களை உம்மை நிராகரிப்பவர்களுக்கு எதிரில் மறுமை நாள் வரை நாம் மேலோங்கச் செய்வோம். (3:56)*

இந்த ஆறுதல் அளிக்கக்கூடிய வாக்குறுதியானது நாசரேத்தில் பிறந்த மர்யமின் மகனிடம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், நான் உங்களுக்கு நற்செய்தி கூறுகின்றேன். இயேசுவின் பெயரில் வந்துள்ள இப்னு மர்யமிற்கும் அல்லாஹ் இதே சொற்களில் நற்செய்தி வழங்கியுள்ளான். இப்போது சிந்தனை செய்யுங்கள். எவர் என்னோடு தொடர்பு வைத்து இந்த மகத்தான வாக்குறுதி மற்றும் மகத்தான நற்செய்தியில் பங்குபெற விரும்புகின்றனரோ அவர்கள் தீமையின் பக்கம் சாய்பவர்களாகவும் குழப்பம் மற்றும் தீமைகள் நிறைந்த வழிகளில் செல்பவர்களாகவும் இருக்க முடியுமா? ஒருபோதும் இருக்க முடியாது. எவர்கள் அல்லாஹ்வின் இந்த வாக்குறுதிக்கு உண்மையான கண்ணியத்தை வழங்குகின்றனரோ, மேலும் நான் கூறும் விசயங்களைக் கதைகள் போன்று கேட்காமல் இருக்கின்றனரோ அவர்கள் நினைவில் கொள்ளட்டும். உள்ளத்தால் இதை கேட்கட்டும்.

நான் மீண்டும் ஒருமுறை இம்மக்களை நோக்கிக் கூறுகின்றேன். அவர்கள் என்னுடன் வைத்துள்ள தொடர்பு ஒரு சாதாரண தொடர்பல்ல. மாறாக அது ஒரு மகத்தான தொடர்பாகும். மேலும் அந்த தொடர்பின் தாக்கம் என்னுடன் மட்டும் தொடர்புடையதல்ல. மாறாக, அது அந்த இறைவனுடன் தொடர்புடையதாகும். அவனே என்னையும் தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட முழுமை பெற்ற மனிதருடன் தொடர்புள்ளவனாக ஆக்கினான். அவர் உலகில் உண்மை மற்றும் நேர்மையின் ஆன்மாவைக் கொண்டு வந்தார். நான் இதையும் கூறுகின்றேன். நான் கூறும் இவ்விசயங்களின் தாக்கம் என்னுடன் தொடர்புடையதாக மட்டும் இருந்திருந்தால் எனக்கு அதனால் எவ்வித துக்கமும் கவலையும் ஏற்பட்டிருக்காது. மேலும் இதை நான் பொருட்படுத்தியிருக்க மாட்டேன். ஆனால் இதோடு இது நின்று விடாது. மாறாக இதன் தாக்கம் நமது நபி கரீம் (ஸல்) அவர்கள் வரையிலும் தூய இறைவன் வரையிலும் சென்று விடுகின்றது. இத்தகைய நிலைமையில் நீங்கள் முழுமையான கவனத்துடன் கேளுங்கள். நீங்கள் இந்த நற்செய்தியில் பங்கு பெற விரும்பினால், இந்த நற்செய்திக்கு பொருந்தக் கூடியவர்களாக ஆக விரும்பினால் மறுமை நாள் வரை உங்களை நிராகரிப்பவர்களுக்கு எதிரில் மறுமை நாள் வரை நீங்கள் அவர்களை மிகைத்து நின்று மகத்தான வெற்றியைப் பெற வேண்டும் என்ற உண்மையான தாகம் உங்களிடம் இருக்கும் என்றால் நான் இதை கூறிக் கொள்கின்றேன். எதுவரை தன்னைத்தானே குற்றம் சாட்டுகின்ற ஆன்மாவைப் பெற்று அந்த தகுதியையும் கடந்து நிம்மதியடைந்த ஆன்மா என்ற மினாரா வரை

நீங்கள் செல்லாமல் இந்த வெற்றியை நீங்கள் பெற முடியாது. இதை விட அதிகமாக வேறு எதையும் நான் கூறமாட்டேன். நீங்கள் இறைவனால் அனுப்பப்பட்ட ஒரு நபருடன் இணைந்திருக்கின்றீர்கள். எனவே அவர் கூறும் விசயங்களை உள்ளத்தின் காதுகளால் கேளுங்கள். அதற்கேற்ப செயல்படுவதற்கு எல்லா நேரமும் தயாராக இருங்கள். ஏற்றுக் கொண்ட பிறகு மறுத்தல் என்ற அசுத்தத்தில் விழுந்து நிரந்தரமான தண்டனையை வாங்குகின்ற மக்களில் ஒருவராக நீங்கள் ஆகிவிடாதீர்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத் இந்த போதனையை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். நான் கூறுகின்ற விசயங்களை அவர்கள் தமது பார்வையில் வைத்திருக்க வேண்டும். எனக்கு எப்போதும் இந்த விசயம் தான் நினைவில் வருகின்றது. உலகில் ஏதாவது வரன் வந்தாலும் அவற்றில் சில அழகைப் பார்த்து வருகின்றன. சில வரன்கள் குடும்பம் மற்றும் செல்வம் ஆகியவற்றின் அடிப்படையில் வருகின்றன. சில வரன்கள் ஒருவருக்கு இருக்கும் சக்தியைப் பார்த்து வருகின்றன. ஆனால் இறைவனது முன்னிலையில் இவ்விசயங்களுக்கு எந்த மதிப்பும் இல்லை. அவன் தெளிவாக கூறிவிட்டான்.

إِنَّ أَكْرَمَكُمْ عِندَ اللَّهِ أَتْقَاكُمْ *எவர் இறையச்சமுடையவராக இருக்கின்றாரோ அவரே அல்லாஹ்வின் பார்வையில் கண்ணியத்திற்கு உரியவராவார். (49:14)*

இப்போது எது இறையச்சமுள்ளவர்களின் ஜமாஅத்தாக இருக்குமோ இறைவன் அதைத்தான் வைத்திருப்பான். மற்றவற்றை அழித்து விடுவான். இது மிகவும் நுண்ணிய இடமாகும். இந்த இடத்தில் இருவர் நிற்க முடியாது. அதாவது இறையச்சமுள்ள ஒருவரும் தீங்கு விளைவிக்கின்ற தூய்மையற்ற ஒருவரும் அந்த ஒரே இடத்தில் நிற்பர் என்பது சாத்தியமற்றதாகும். நிச்சயமாக இறையச்சமுள்ளவர் அந்த இடத்தில் நிற்பார். தீயவர் அழிக்கப்படுவார். எவர் அந்த இறைவனின் பார்வையில் இறையச்சமுள்ளவராக இருக்கின்றார் என்பதைப் பற்றிய அறிவு இறைவனுக்குத்தான் இருக்கின்றது என்பதால் இது மிகவும் அச்சப்பட வேண்டிய இடமாகும். இறையச்சமுள்ள மனிதன் நற்பாக்கியம் பெற்றவனாக இருக்கின்றான். இறைவனது சாபத்தின் கீழ் வருபவன் பாக்கியமற்றவன் ஆவான்.

அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவருக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இந்த வேதனையைப் புரிந்து கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! தம்மை சீர்திருத்துவதன் பக்கம் கவனம் செலுத்துவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த விசயத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த விசயங்கள் மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்காக மட்டும் கூறப்பட்டதல்ல. அவர்களை நோக்கி மட்டும் இவை கூறப்படவில்லை. மாறாக உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு அஹ்மதியையும் நோக்கி இவை கூறப்பட்டுள்ளன. முஹம்மதிய மஸீஹின் ஊரில் மாநாட்டின் அருள்கள் நீடித்திருக்கின்ற இந்த நாட்களில் உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் குறிப்பாக தன்னையும் இறைவனை நினைவு கூர்வது மற்றும் குறிப்பான துஆக்களை செய்வது ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்துபவராக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக இந்த துஆக்களை காதியானில் நடைபெறும் ஆண்டு மாநாட்டிலும் உலகின் மற்ற நாடுகளில் நடைபெறும் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் செய்ய வேண்டும். உலகிலுள்ள ஒவ்வொரு அஹ்மதியும் இந்த துஆவை செய்ய வேண்டும். உலகில் எங்கெல்லாம் அஹ்மதிகள் துன்பங்களில் சிக்கியுள்ளனரோ, மேலும் முஹம்மதிய மஸீஹை ஏற்றுக் கொண்டதன் விளைவாக துன்பங்களில் சிக்கியுள்ளனரோ அவர்களது கவலைகளை அல்லாஹ் அகற்றுவானாக! குறிப்பாக பாகிஸ்தான், இந்தோனேஷியா, சிரியா மற்றும் வேறு சில நாடுகளிலும் அல்லாஹ் அஹ்மதிகளுக்கு எளிதான நிலைமை ஏற்படுவதற்கான வழியை ஏற்படுத்துவானாக! அவர்களது விடுதலைக்கான வழிவகையை உருவாக்குவானாக! இது மிகவும் முக்கியமான துஆவாகும். இது சகோதரத்துவத்தை வெளிப்படுத்திக் காட்டுவதற்கு அவசியமானதாகும். சகோதரத்துவத்தை நாம் பேணுவது நாம் கண்டிப்பாக இந்த துஆவை செய்ய வேண்டும் என்பதை நம்மிடம எதிர்பார்க்கின்றது. அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **27.12.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456